**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

**OS.No**.1001/2023 பெயர்- ராதா நாள்.31.01.2025

பி.வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.2 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**:

நான் 8ம் வகுப்பு படித்துள்ளேன். எனது கணவர் 12ம் வகுப்பு படித்துள்ளார். நானும், எனது கணவரும் பைனான்ஸ் தொழில் செய்து வந்தோம். பனியன் கம்பெனியில் வேஸ்ட் நூல்களை எடுத்து அதை வைத்தும் வியாபாரம் செய்து வந்தோம். மேற்படி வியாபாரங்களுக்கான ஆவணங்கள் உள்ளனவா என்றால், உள்ளன. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், இயலும். எனக்கும், என்னுடைய கணவருக்கும் சேர்தது மாதம் எவ்வளவு வருமானம் வரும் என்றால், மாதம் ரூ.60,000/-ம் வருமானம் வரும். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய இயலுமா என்றால், இயலாது. நானும், எனது கணவரும் வருமானவரி செலுத்தியுள்ளோமா என்றால், இல்லை. நானும், எனது கணவரும் சேர்ந்துதான் இருக்கிறோம். இந்த வழக்கு விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். இந்த வழக்கின் வாதி ஜெயலட்சுமியும் அவருடைய கணவரும், நானும், என் கணவரும் வாங்கிய கடனுக்கு தனித்தனியாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால், சரிதான். மேற்படி இரண்டு வழக்கறிஞர் அறிவிப்பிற்கும் சேர்த்து நானும், எனது கணவரும் சேர்ந்து ஒரே பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளோம் என்றால், சரிதான். மேற்படி எங்களால் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்புதான் தற்சமயம் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணம் என்றால், சரிதான். நானும், எனது கணவரும் ஒரே வீட்டில் வசித்து வருகிறோம் என்ற நிலையிலும், ஒன்றாக பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளோம் என்ற நிலையிலும் நான் என் கணவருக்காக

நேரடியாக சாட்சியம் அளிக்க வராமல் நீதிமன்றத்திலிருந்து என் கணவரால் எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அதன் அடிப்படையில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளது ஏன் என்றால், என் கணவர் சில தேதிகளை சொல்லாமல் விட்டு விட்டார். அதற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னென்ன தேதிகள் குறித்து சொல்லாமல் விட்டு விட்டேன் என்று என் கணவர் என்னிடம் சொன்னாரா என்றால், சொன்னார், எனக்கும் தெரியும். என் மீதும் என் கணவர் மீதும் யார் யார் எத்னை வழக்குகள் தாக்ல செய்துள்ளனர் என்றால், என் அண்ணன்கள் இரண்டுபேரும், தங்கைமயும், தங்கையின் கணவரும் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அது தவிர நவீன்குமார் என்ற நபரும் ஈரோடு விரைவு நீதிமன்றம் எண்.2ல் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், அது வேறு வழக்கு அந்த வழக்கு செட்டில் ஆகி விட்டது. என் அண்ணன் எங்களுடைய சொத்தின் பத்திரத்தை அவரிடம் கொடுத்து மீண்டும் என் அண்ணனின் தூண்டுதலின்பேரில் அந்த வழக்கு நடத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற CIS பதிவேட்டின் கணினி பதிவிறக்க நகலில் உள்ள STC.335/2021 என்ற வழக்குதான் மேற்படி வழக்கு என்றால், சரிதான். மேற்படி CIS பதிவேட்டின் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நவீன்குமார் எனது கணவர் மீது தாக்கல் செய்த வழக்கு குறித்ததான ஆவணங்கள் இந்த வழக்கில் மறைக்கப்பட்டுள்ளன என்றால், சரியல்ல. நானும், எனது கணவரும் கடன் வாங்கிய நபர்களிடம் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றிய காரணத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தை அணுகி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால், சரியல்ல. மேற்படி 6 வழக்குகளுக்கும் ஒரே வழக்கறிஞர் ஸ்ரீ.ரவிச்சந்திர பிரபு என்றால், சரிதான். காசோலைகள் காணாமல் போய்விட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் நானோ, எனது கணவரோ என் சகோதரர்கள் வெற்றிவேல், யுவராஜ் மற்றும் சகோதரி ஜெயலட்சுமி

மற்றும் ஜெயலட்சுமியின் கணவர் குமாரதேவன் ஆகியோர் மீது புகாரோ, தனிநபர் வழக்கோ தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை, பேசி செட்டில் செய்து கொண்டுவிடலாம் என்று இருந்து விட்டேன். பதில் அறிவிப்பில் வெற்றிவேலைத் தவிர வேறு நபர்கள் எவர் மீதும் எந்த குற்றச்சாட்டும் சொல்லவில்லை என்றால், சரிதான். என்னுடைய அம்மாவை இந்த வழக்கில் எங்களது தரப்பில் சாட்சியாக விசாரிக்க உள்ளோமா என்றால், இல்லை. ஏனெனில் அவர் பையனுக்கு ஆதரவாகத்தான் சாட்சியம் அளிப்பார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்புவரை எங்களுடைய சகோதர சகோதரிகளுக்கு இடையே நல்ல உறவு முறை இருந்ததா என்றால், இருந்தது. 01.08.2022ம் தேதியில் ரூ.11,05,000/-க்கு சுத்தக்கிரயம் எனது பெயரிலும், எனது கணவர் பெயரிலும் செய்யப்பட்டதற்கான பத்திரம் தான் வா.சா.ஆ.6 என்றால், சரிதான். மேற்படி பத்திரத்திற்கு எவ்வளவு ஸ்டாம்பு பேப்பர் எங்கு வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி கிரையப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது மேற்படி சொத்தின் வழிகட்டி மதிப்பு என்றால், சரிதான். மேற்படி சொத்தின் மதிப்பு ரூ.1 கோடியே 50 லட்சம் என்று இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைநிலை மனு எண்.2/2023ல் என் கணவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.6 கிரையச் சொத்தை ஏக்கர் எவ்வளவு என்று விலை பேசி கிரையம் வாங்கினோம் என்றால், அது எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை நாங்கள் ஏற்கனவே போக்கியத்திற்கு எடுத்து உழவு ஓட்டி வந்தோம். கொஞ்சம் கொஞ்சமாக தொகையாக ஏற்கனவே கொடுத்திருந்தோம். எந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்று சொல்ல இயலுமா என்றால், நான் எழுதி வைத்துள்ள டைரியில் பார்த்தால் தான் சொல்ல இயலும், மேற்படி சங்கதிகள் மேற்படி கிரையப்பத்திரத்தில் சொல்லப்படவில்லை என்றால், சரிதான். 01.08.2022ம் தேதிதான்

மேற்படி ரூ.11,05,000/-ம் தொகை கொடுக்கப்பட்டதாக மேற்படி கிரையப்பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். நகையை அடமானம் வைத்து மேற்படி தொகையை கொடுத்தேன். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய இயலுமா என்றால், இயலும். மேற்படி 01.08.2022ம் தேதி கிரையத்திற்காகத்தான் நான் என்னுடைய சகோதரி ஜெயலட்சுமி, சகோதரியின் கணவர் குமாரதேவன் மற்றும் சகோதரர்கள் வெற்றிவேல், யுவராஜ் ஆகியோரிடம் மொத்தமாக ரூ.36 லட்சம் கடன் வாங்கி மேற்படி சொத்தை அதன் சந்தை மதிப்பிற்கு தொகை கொடுத்து கிரையம் வாங்கியுள்ளேன் என்றால், நான்தான் அவர்களுக்கு பணம் கொடுத்து உதவி செய்தேன். அவர்களிடம் நான் பணம் வாங்கவில்லை. மேற்படி கிரையப்பத்திரத்தில் எனது சகோதரர் யுவராஜ் சாட்சிக் கையெழுத்து போட்டுள்ளார். என் அம்மா ராமலட்சுமி மேற்படி பத்திரத்தில் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி எனது சகோதர, சகோதரிகள் மேற்படி பூமியை வாங்குவதற்கு கடன் கொடுத்த காரணத்தினால்தான் என்கூடவே வந்தது மேற்படி பத்திரத்தில் சாட்சிக் கையெழுத்து போட்டுள்ளனர் என்றால், சரியல்ல. மேற்படி என்னுடைய சகோதர, சகோதரிகள் எனக்கு கொடுத்த பணத்தை திருப்பிக் கொடுக்காமல் நான் அவர்களிடம் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால், சரியல்ல. எனக்கும், எனது கணவருக்கும் 3 ஏக்கர் எனது மாமனாரின் தோட்டம் இருந்தது. அதை விற்று வீட்டு மனைகள் போட்டோம். அதெல்லாம் உள்ளது, சிலவற்றை விற்பனை செய்து விட்டோம். திருப்பூர் கொடுவாய்க்கு பக்கத்தில் வீட்டு மனை போட்டு உள்ளோம். 3 ஏக்கர் பூமியை விற்று விட்டோம், வீட்டு மனைகள் மட்டும் உள்ளது. என் கணவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். எனக்கு கனரா வங்கி மற்றும் பெடரல் வங்கிக் கணக்கு உள்ளது. எனக்கு வங்கியில் கணக்குகள் உள்ள நிலையில் காசோலை தொலைந்து விட்டால் உடனே அது குறித்து வங்கியில் ஸ்டாப் பேமெண்ட் கடிதம் கொடுக்க வேண்டும்

என்ற விதிமுறை தெரியுமா என்றால், தெரியும். என் கணவரின் காசோலைகளும், எனது காசோலைகளும் தொலைந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அது குறித்து ஸ்டாப் பேமெண்ட் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால், என் அம்மா பேசி வாங்கித்தருவதாக கூறியதால் மேற்படி காசோலைகள் குறித்து ஸ்டாப் பேமெண்ட் கடிதம் கொடுக்கவில்லை. நானும், என் கணவரும் இந்த வழக்கு காசோலைகள் எங்களுடையது அல்ல என்று மறுக்கவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கு காசோலையான வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என் கணவருடையதா என்றால், என் கணவருடையதுதான், மேற்படி காசோலையில் உள்ள விவரங்கள் என் கணவரால் பூர்த்தி செய்யப்பட்டவை அல்ல. என் தங்கையின் கணவர் குமாரதேவன் தமிழ்நாடு ஐடிஐயில் வேலை பார்த்து வருகிறார் என்றால், சரிதான். அவர் எலெக்ட்ரிகல் துறையில் வேலை பார்க்கிறார் என்று தெரியுமா என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. அவர் ஐடிஐயில் வேலை பார்த்து வருகிறார் என்றாலும், அது மட்டுமின்றி மிஞ்சிய நேரங்களில் எலெக்ட்ரிசியனாக தனிப்பட்ட வகையில் வேலை பார்து வருகிறார் என்றாலும், தவறு. அவர் மாதம் ரூ.60,000/- முதல் ரூ.70,000/-ம் சம்பாதித்து வருகிறார் என்றால், சரியல்ல. அவர் எங்களிடம் மாலை நேரத்தில் வேலை ஏதாவது கிடைக்குமா என்று கேட்டு வந்தார். இந்த வழக்கின் வாதி ஓவர் டைம் வேலை பார்த்து அதன் மூலமாக மாதம் ரூ.30,000/-க்கு மேல் ஊக்கத் தொகை பெற்று வருகிறார் என்றால், சரியல்ல. இந்த வழக்கு காசோலை என் கணவரின் காசோலை என்ற நிலையிலுமூ அததிலள் ளகையெழுத் என்கணவரின் கையெழுத்து என் கணவரின் கையெழுத்து என்று ஒப்புக் கொள்ளப்பட்ட நிலையிலும் மேற்படி காசோலைத்தொகை கொடுக்க என் கணவர் கடமைப்பட்டவர் என்றால், சரியல்ல. அதனால்தான் மேற்படி காசோலைகள் தொலைந்து போய் விட்டது என்று சொல்லியுள்ள நிலையில் அதை திரும்பப் பெறுவதற்கோ அல்லது அதை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள் என்று

கூறியுள்ள நிலையில் அது குறித்தோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும், சரியல்ல. அதனால்தான் மேற்படி காசோலை எந்த தேதியில் தொலைந்து போனது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரியல்ல, 17.09.2022ல் தொலைந்து போன சங்கதி எனக்குத் தெரிய வந்தது. நான் மேலே சொன்ன வகையில் ரூ.36 லட்சம் கடன் பெற்ற காரணத்தினால்தான் மேற்படி பூமியின் அசல் பத்திரம் நாளது தேதி வரை என் அம்மா வசம் உள்ளது என்றால், தவறு, என் அண்ணன் அதை எடுத்துப் போய் விட்டார். நான், எனது சகோதர, சகோதாரிகளிடம் வாங்கிய கடனை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் நானும், எனது கணவரும் பொய்யாக சேர்ந்து கட்சி செய்கிறோம் என்றால், சரியல்ல. எனது சாட்சியம் செல்லத்தக்கது அல்ல என்றால், சரியல்ல.